# முகமாலையில் கண்ணிவெடி அகற்றலின்போது மனித எச்சங்கள் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதவான் வருகை தந்து விசாரணை

## மனித எச்சங்களை சட்ட வைத்திய அதிகாரி மூலம் பரிசோதனைக்கு உட்படுத்த உத்தரவு பிறப்பித்தார்!



**கிளிநொச்சி முகமாலைப்பகுதியில் கண்ணிவெடி அகற்றலின்போது மனித எச்சங்கள் மீட்கப்பட்ட சம்பவ இடத்திற்கு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதவான் இஸ்மாத் ஜெமில் வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டார்.** 2➤



மாலைக்கதிர்
Maalaikkathir
சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 13 வெள்ளிக்கிழமை 23.04.2024 கதிர் 241




# அடுத்த ஜனாதிபதியும் நமதே, அரசாங்கமும் நமதே மே தினத்தை பிரமாண்டமாக கொண்டாடவுள்ளோம்!

## உமா ஓயா திட்டம் குறித்தும் பெருமிதம் கொள்கிறார் சந்திரசேன எம்.பி.

உமா ஓயா திட்டத்தை சீர்குலைக்கும் நடவடிக்கையில் மக்கள் விடுதலை முன்னணியின் சமந்த வித்யாரத்ன ஈடுபட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். எம். சந்திரசேன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் "ஈரான் ஜனாதிபதி வந்து உமா ஓயா திட்டத்தை சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தார்.



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தின் போது 2011 இல் இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 2➤

# உமா ஓயா திட்டம் தான் நாட்டிலேயே மிகவும் தோல்வியுற்ற பலவீனமான ஒரு திட்டமாகும்!

## 17,500 குடும்பங்கள் இருப்பிடமின்றி அவதிப்படுவதாகக் குற்றச்சாட்டு!

உமா ஓயா திட்டம் வெகு விமரிசையாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ள போதிலும் இதற்காக இடம்பெயர வைக்கப்பட்ட 17,500 குடும்பங்கள் இன்னமும் எந்தவொரு நியாயமும் கிடைக்காமல் இருப்பிடங்களின்றி அவதிப்படுவதாகவும், அவர்களுக்கு நீதி பெற்றுக் கொடுக்க எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை என காணி மற்றும் விவசாய மறுசீரமைப்பு இயக்கத்தை சேர்ந்த சஜீவ சமிகர தெரிவித்துள்ளார்.



இத்திட்டத்தினால் ஆயிரக் கணக்கான விவசாய நிலங்கள் இழக்கப்பட்டுள்ளதாகவும், நூற்றுக்கணக்கான 2➤

# அனுர இன்று சுவீடன் பறந்தார்




தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க இன்று அதிகாலை ஸ்வீடன் நோக்கி பயணமானார். மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டுள்ள திசாநாயக்க, நாளை (27) மற்றும் நாளை மறுதினம் (28) அந்நாட்டில் பல பொதுக்கூட்டங்களை நடத்தவுள்ளார், அங்கு வாழ்கின்ற இலங்கையர்கள் மத்தியில் அவர் உரையாற்றவுள்ளார் என அறியவருகின்றது.

மேலும், அங்கு வாழும் இலங்கையர்களின் 2➤

# நிச்சயமாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவேன்!

## ரணில் கூறியதாக பசில் கூறுகிறார்



ஜனாதிபதித் தேர்தலில் நிச்சயமாக போட்டியிடுவேன் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தன்னிடம் தெரிவித்ததாக பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் - 'மே மாதம் முதல் இரண்டு வாரங்களுக்குள் பொதுஜன பெரமுனவின் நிறைவேற்றுக் குழ கூடி ஜனாதிபதி வேட்பாளர் குறித்து முடிவெடுக்கப்பட்டு, அது ஜனாதிபதிக்கு தெரிவிக்கப்படும்' என்றார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்ற அவசர சந்திப்பின் பின்னரே அவர் மேற்படி கருத்துக்களை தெரிவித்தார். (ரெசி-122)

# பாதாள உலக குற்றவாளிகளை தாக்கி அழிக்கும் பொலிஸ் அதிரடி மோட்டார் சைக்கிள் படையணி களம் இறங்கியது

தாக்கிவிட்டு தப்பிச் செல்லும் பாதாள உலக குற்றவாளிகளை பின் தொடர்ந்துச் சென்று அவர்களை தாக்கி அழிக்கும் 96 பேரைக் கொண்ட பொலிஸ் விசேட அதிரடிப் படையின் மோட்டார் சைக்கிள் படையணி நேற்று (25ம் திகதி) முதல் தனது செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவிற்குட்பட்ட இந்த விசேட மோட்டார் சைக்கிள் படையணி பிரிவினர் மேல் மற்றும் தென் மாகாணங்களில் பாதாள உலக செயற்பாடுகள் அதிகம் காணப்படும் பிரதேசங்களில் தங்கியிருந்து தமது நடவடிக்கைகளை முன்னெடுப்பார்கள்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் திறமையான 100 பேர் தெரிவு செய்யப்பட்டு கிட்டத்தட்ட ஒரு மாத காலமாக கட்டுகுருந்த விசேட அதிரடிப்படை முகாமில் அவர்களுக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்தன. இவ்வாறு பயிற்சியை நிறைவு செய்த 96 பொலிஸ் விசேட அதிரடிப்படையினரே நேற்று 48 மோட்டார் சைக்கிள்களுடன் தமது நடவடிக்கைகளை ஆரம்பித்தனர்.

இந்த தாக்குதல் படை அதிகாரிகளை களம் இறக்கும் உத்தியோகபூர்வ ஆரம்ப நிகழ்வு நேற்று (25) காலை கட்டுகுருந்த விசேட அதிரடிப்படை முகாமில் இடம்பெற்றதுடன் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், விசேட அதிரடிப்பிரிவின் கட்டளைத் தளபதி வருண ஜயசுந்தர உட்பட பல உயர் அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்து கண்டனர்.

பாதாள உலகக் குற்றவாளிகள் எவ்வாறு மோட்டார் சைக்கிள் 2➤

# அரச நிறைவேற்று அதிகாரிகள் இரண்டு நாள் அடையாள வேலை நிறுத்தத்திற்கு ஆயத்தம்

## தீர்வு இன்றேல் கடுமையான நடவடிக்கை என்கிறார் சங்கத்தின் தலைவர்

தமது தொழில் சார் பிரச்சனைகளுக்கு தீர்வுகளை பெற்றுத் தருவதில் அரசாங்கம் இதுவரையில் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளாததால், அதற்கு எதிர்ப்பு தெரிவிக்குமுகமாக எதிர்வரும் மே மாதம் 02 மற்றும் 03 ஆகிய இரண்டு தினங்களில் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதற்கு அரசாங்க நிறைவேற்று அதிகாரிகளின் ஒன்றிணைந்த குழு தீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ளது.

இது தொடர்பாக பொறுப்புள்ள அதிகாரிகளால் உரிய நடவடிக்கைகள் எடுக்காவிட்டால், அடுத்த கட்டமாக கடுமையான தொழிற்சங்க நடவடிக்கைகளை எடுப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் மேற்படி ஒன்றிணைந்த சங்கத்தின் தலைவர் ஏ.எல். உதயசிறி தெரிவித்துள்ளார்.

அரசாங்க நிறைவேற்று அதிகாரிகள் முகம் கொடுத்துள்ள சம்பள முரண்பாடுகள், வாழ்க்கைச் செலவுகளுக்கேற்ற நிவாரணங்களை விரைவாக பெறல், அரச சேவைகள 2➤

## உமா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நீர் ஆதாரங்கள் வறண்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டிய அவர் 17,500 குடும்பங்கள் வீடுகளை இழந்துள்ளதாக

## அடுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதன் போது பல எதிர்ப்புகள் எழுந்தன. ஜே.வி.பி.யின் முன்னாள் உறுப்பினர் சமந்த வித்யாரத்ன இதை பெரிய அளவில் சீர்குலைக்க பலவாறும் முயன்றார். பல அவமதிப்புகள் நடைபெற்றன. மக்கள் குழப்பப்பட்டனர், அப்போது, நாலாபுறமுமிருந்து மிரட்டல் விடுத்து, கூச்சலிட்டு இதை தடுக்க முயன்றனர்.

ஆனால், இந்த திட்டத்தால் நாட்டுக்கும் மக்களுக்கும் பெரிய பலன்கள் கிடைக்கும். நமது நாட்டின் மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் இந்தத் திட்டத்தின் மூலம் நாடு 120 மெகாவாட் மின்சாரத் திறனைப் பெறும். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இத்திட்டங்களின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டு, அவமானங்கள், அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் அதனைச் செய்ததால் இன்று நாட்டின் மின்சாரத் தேவைக்காக 120 மெகாவோட் மின்சாரத்தை எமது நாடு பெற்றுக் கொண்டுள்ளது. இதற்காக நான் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன். இம்முறை நமது மே தின கூட்டத்தை கெம்பல் மைதானத்தில் நடத்தத் திட்டமிட்டுள்ளோம். இதற்காக ஏராளமான மக்கள் வரத் தயாராக உள்ளனர். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிலிருந்து தான் அடுத்த ஜனாதிபதி தெரிவாவதுடன், அரசாங்கமும் அமைக்கப்படும்" என்றார். (ரெசி-119 )

## முகமாலையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கிளிநொச்சி பளைப்பொலிஸ் பிரிவுக்குற்பட்ட முகமாலைப்பகுதியில் நேற்றைய தினம் கண்ணிவெடி அகற்றலின் போது மனித எச்சங்களுடன் கூடிய ஆடை ஒன்று இனங்காணப்பட்டதையடுத்து பளை பொலிசாருக்கு தகவல் வழங்கப்பட்டிருந்தது.

பொலிசார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டதுடன் மாவட்ட நீதிமன்ற நீதவானின் கவனத்திற்கு கொண்டு சென்றிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதவான் இஸ்மாத் ஜெமில் இன்று காலை சம்பவ இடத்திற்கு வருகை தந்து குறித்த மனித எச்சம் மற்றும் மனித எச்ச இனங்காணப்பட்ட பகுதிகளை பார்வையிட்டார்.

தொடர்ந்து குறித்த பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணியாளர்கள் மூலம் குறித்த பகுதியை கண்ணிவெடி அகற்றும் பணியை முன்னெடுக்குமாறும் கிடைக்கப்பெறுகின்ற எச்சங்கள் மற்றும் தடயங்கள் தொடர்பாக பளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் கவனத்திற்கு கொண்டுவருமாறும் தற்போது கிடைக்கப்பெற்ற மனித எச்சங்கள் சட்ட வைத்திய அதிகாரி மூலம் பரிசோதனைக்கு உட்படுத்த அனுப்பி வைக்குமாறும் எதிர்வரும் திங்கட்கிழமை சம்பவ இடத்திற்கு வருகை தந்து பார்வையிடுவதாகவும் நீதவான் தெரிவித்தார். (02)

குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த மக்களுக்கு இதுவரை நியாயம் கிடைக்கவில்லை எனவும், அவர்கள் நீதி கோரி நீதிமன்றத்தை நாடியுள்ளதாகவும், எனவே நீதிமன்றத்தின் மூலம் நீதி கிடைக்கும் என தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டிலேயே மிகவும் தோல்வியடைந்த மற்றும் பலவீனமான திட்டம் உமா ஓயா என்றும் அவர் குற்றம் சாட்டினார். இந்த திட்டம் மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் எவ்விதமான ஆய்வுகளோ அல்லது சுற்றாடல் மதிப்பீடோ இன்றி ஆரம்பிக்கப்பட்ட ஒரு திட்டமாகும் எனவும் சஜீவ சமிகர மேலும் குறிப்பிட்டுள்ளார். (ரெசி-120 )

## அனுர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அழைப்பின் பேரில் இன்னும் பல சந்திப்புகள் நடத்தப்படுவதுடன், அங்குள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் உள்ளிட்ட அனைத்து சமூகத்தினருடனும் பல சுற்று கலந்துரையாடல்கள் நடத்தப்படும் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ரெசி-123 )

## பாதாள....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

படையணியினால் துரத்திச் செல்லப்பட்டு தாக்கப்படுகிறார்கள் என்பதை காட்டும் விதமான கண்காட்சி ஒத்திகையும் இங்கே நிகழ்த்தப்பட்டது. அதன்படி குற்றம் இழைத்துவிட்டு காரில் தப்பிச் செல்லும் பாதாள உலகக் குற்றவாளிகள் குழுவொன்றை துரத்திச் சென்று தாக்கி பிடிக்கும் கண்காட்சி நிகழ்வும் இங்கு நடைபெற்றது.

பொலிஸ் மா அதிபரின் கீழான விசேட அதிரடிப்படைத் தளபதியின் நேரடிக் கண்காணிப்பில் இந்த விசேட அதிரடிப் படையினர் தமது நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெசி-121)

## அரச.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆணைக்குழுவானது அரசாங்கத்தின் சட்டவிதிமுறைகளை கவனத்தில் கொள்ளாது எடுக்கின்ற தனித்த முடிவுகளினால் முரண்பாடுகளுக்கு ஆளாகியுள்ள அதிகாரிகளுக்கு உடனடியாக தீர்வுகளை பெறல் உட்பட பிரதான இரண்டு கோரிக்கைகளை முன்னிறுத்தி இந்த இரண்டு நாள் அடையாள வேலைநிறுத்தம் நடைபெறவுள்ளதாகவும், இதில் 18,000 ற்கும் மேற்பட்ட அரச நிறைவேற்று அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளதாகவும் உதயசிறி மேலும் தெரிவித்துள்ளார். (ரெசி-124)

# கொழும்பில் நீர் வெட்டு!

கொழும்பின் சில பகுதிகளுக்கு 14 மணிநேர நீர் வெட்டு அமுல்படுத்தப்படும் என தேசிய நீர் வழுங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

அதன்படி நாளை சனிக்கிழமை மாலை 5 மணி முதல் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி வரை குறித்த நீர் வெட்டு அமுல்படுத்தப்படும் எனவும் தேசிய நீர் வழுங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

அந்தவகையில் கொழும்பு 5 மற்றும் கொழும்பு 6, தெஹிவளை, கல்கிசை மற்றும் மொரட்டுவ நகர சபை பகுதிகளிலும், ஜயந்திபுர மற்றும் பெலவத்தை பிரதேசங்களிலும் இந்த நீர் வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# கிளிநொச்சியில் மடு அன்னையின் திருச்சொருபத்துக்கு வரவேற்பு

*50 வருடங்களின் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளில் உள்ள பங்கு ஆலயங்களுக்கு வருகைதந்த மடு அன்னையின் திருச்சொருபம் அமோக வரவேற்புடன் உச்ச பாதுகாப்புடன் வரவேற்கப்பட்டுள்ளது.*

*தருமபுரம் சவேரியர் ஆலயத்தில் மக்கள் ஆசிக்காக மடு அன்னையின் திருச்சொருபம் வைக்கப்பட்டது. இதன்போது பெருமளவிலான மக்கள் மடு அன்னையின் ஆசீயைப் பெற்றனர். (02)*

# பால் மா விலை குறைப்பு இல்லை

*ஏப்ரல் 25 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரு வகையில் பால் பாவின் விலை குறைக்கப்படும் என வெளியாகியுள்ள தகவல் எந்தவொரு அடிப்படையும் அற்றதென்பதை கவனத்தில் கொள்ளுமாறு பால் மா இறக்குமதியாளர்களின் சங்கம் தெரிவித்துள்ளது. மேற்படி சங்கத்தின் ஊடக பேச்சாளரான அசோக்க பண்டார இது குறித்து அறிக்கையொன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளார்.*

*சிங்கள - தமிழ்ப் புத்தாண்டையொட்டி மக்களுக்கு நிவாரணம் வழுங்கும் விதமாக பால் மாவின் விலைகளை குறைக்குமாறு வர்த்தக அமைச்சு கேட்டுக் கொண்டதற்கிணங்க 2024 ஏப்ரல் முதலாம் திகதி முதல் அனைத்து வகை பால் மா விலைகளும் அப்போதே குறைக்கப்பட்டிருந்தன, அதன்படி 400 கிராம் பால்மாவின் அதிகபட்ச சில்லறை விலை ஷரூ. 1,050 என நிர்ணயிக்கப்பட்டது என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*(ரெசி-125)*




# அமைச்சர் மஹிந்த அமரவீர இன்று ஈரானுக்கு பயணம்

*விவசாய மற்றும் பெருந்தோட்டகைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர இன்று ஈரானுக்கு பயணமாகியுள்ளார்.*

*தெஹ்ரானில் நடைபெறும் எக்ஸ்போ கண்காட்சியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்த அவர் அங்கு பயணமாகியுள்ளதுடன் அங்கு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, ஈரானின் விவசாய அமைச்சர் மொஹமட் அலி நிக்பக்ட்டை சந்திக்க உள்ளார்.*

*இதில் அமைச்சர் மொஹமட் அலி நிக்பக்டுடனான சந்திப்பில் புதிய விவசாய தொழில்நுட்ப பரிமாற்றம் தொடர்பில் கலந்துரையாட உள்ளதாகவும் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.*

*இதேவேளை அமைச்சர் மகிந்த அமரவீர எக்ஸ்போ இல் பங்கேற்பதில்லை என முன்னர் தீர்மானித்திருந்த போதிலும், ஈரான் ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கு இணங்க கண்காட்சியில் கலந்து கொண்டுளுமை குறிப்பிடத்தக்கது.*



# காஸா சிறுவர் நிதியத்திற்கு 5 மில்லியன் நிதி கையளிப்பு

(நூருல் ஹுதா உமர்)

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் யோசனையின் பேரில் காஸா பகுதியில் இடம்பெற்ற மோதல்களினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட காஸா சிறுவர் நிதியத்திற்கு கல்முனை வலயக்கல்வி அலுவலகம், கல்முனை ஹுதா ஜும்மா பள்ளிவாசல் மற்றும் ஸ்போர்ட்ஸ் பெர்ஸ்ட் பௌண்டஷன் ஆகிய பொது நிறுவனங்களினால் 50 லட்சம் ரூபாய் நிதி நன்கொடையாக இன்று ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் உத்தியோகபூர்வமாக வழங்கி வைக்கப்பட்டது.

முன்னாள் இராஜாங்க அமைச்சரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸின் வழிகாட்டலில் இடம்பெற்ற இந்நிதி கையளிக்கும் நிகழ்வில் முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தனவோடு அதிகாரிகள் பலரும் பங்கேற்றிருந்தனர்.

காஸா சிறுவர்களின் நல திட்டத்திற்காக கல்முனை கல்வி வலய உத்தியோகத்தர்கள், அதிபர், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்களின் பங்களிப்பில் 3,128,500 ரூபா நிதியும், கல்முனை ஹுதா ஜும்மா பள்ளிவாசல் சார்பில் நிர்வாகிகள், பொதுமக்கள் மற்றும் தனவந்தர்களின் அன்பளிப்பாக கிடைக்கப்பெற்ற 1,589,000 ரூபா நிதியும், ஸ்போர்ட்ஸ் பெர்ஸ்ட் பௌண்டஷன் சார்பில் 300,000 ரூபா நிதியுமாக ஐந்து மில்லியன் ரூபா பணத்தை இன்று ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தனர்.

ஸ்போர்ட்ஸ் பெர்ஸ்ட் பௌண்டஷன் சார்பில் நிதியை பௌண்டஷனின் தவிசாளர் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், கல்முனை கல்வி வலய நிதியை பணிப்பாளர் எம்.எஸ். ச/ஹதுல் நஜீம் தலைமையிலான பிரதிக் கல்வி பணிப்பாளர் எம்.எச். ஜாபீர், கணக்காளர் வை. ஹபீபுல்லா, அதிபர், ஆசிரியர் சார்பில் நவாஸ் சௌபி அடங்கிய குழுவும், கல்முனை ஹுதா ஜு/ம்மா பள்ளிவாசல் சார்பில் பள்ளிவாசல் தலைவர் ஏ.எம். இப்ராஹிம் மற்றும் நிர்வாகிகளும் கையளித்தனர்.

# இளவாலைத் திருமறைக் கலாமன்றத்தின் வெள்ளி விழா ஞாயிற்றுக்கிழமை




இளவாலைத்திருமறைக்கலாமன்றத்தின் வெள்ளி விழா நிகழ்வுகள் நாளை மறுதினம் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு இளவாலையில் அமைந்துள்ள கலைத்தூது கலைக்களரியில் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளன.

இளவாலைத்திருமறைக்கலாமன்றத்தின் இணைப்பாளர்செ.பியன்வெனுதலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.மறைமாவட்ட ஆயர் பேரருள்திரு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையும், சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் பிரதேசச் செயலர் திருமதி சுபாஜினி மதியழகன் மற்றும் யாழ்.பல்கலைக்கழக சேர் பொன்னம்பலம் இராமநாதன் காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீடத்தின் பீடாதிபதி சா.சிவஷரூபன் ஆகியோரும், கௌரவ விருந்தினராக திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமாரும் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

நிகழ்வில் மதத் தலைவர்களின் ஆசியுரைகள், வெள்ளி விழா மலர் வெளியீடு, நடனங்கள், நாடகம், நாட்டிய நாடகம் , 'பண்டாரவன்னியன்'நாட்டுக்கூத்து உட்பட பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.






# தந்தை செல்வநாயகத்தின் 47வது ஆண்டு நினைவு

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நிறுவுனர் தந்தை செல்வநாயகத்தின் 47வது ஆண்டு நினைவு நாளும் நினைவுப் பேருரையும் இன்றையதினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

தந்தை செல்வா நினைவு அறங்காவற் குழுவின் ஏற்பாட்டில் யாழிலுள்ள தந்தை செல்வநாயகம் நினைவுத் தூபியில் இந்நிகழ்வு இன்று காலை நடைபெற்றது.

தந்தை செல்வாவின் தூபிக்கு மலர் மாலை அணிவித்து சமாதியில் மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர் கே.ரி. கணேசலிங்கம் "இலங்கை தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்கான வாய்ப்புக்களும் சவால்களும்" எனும் தலைப்பில் நினைவுப் பேருரை யாற்றினார்.

இதன்போது இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் உள்ளிட்ட கட்சியின் மூத்த பிரமுகர்கள், அரசியல் பிரமுகர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

(01)

# முல்லைத்தீவு - முறிகண்டி ஏ 9 வீதியில் விபத்து இராணுவ வீரர் உயிரிழப்பு நால்வர் படுகாயம்



முல்லைத்தீவு - முறிகண்டி ஏ 9 வீதியில் இடம் பெற்ற வாகன விபத்தில் இராணுவ வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும்நான்கு பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

ஏ 9 வீதியில் யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த பார ஊர்தி ஒன்றும் திருமுருகண்டி பகுதியில் உள்ள இராணுவ முகாமுக்கு திரும்ப முற்பட்ட கப்ரக வாகனமும் இன்று காலை மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த இரு வாகனங்களும் மோதி விபத்துக்குள்ளானதில் கப்ரக வாகனத்தில்பயணித்த இராணுவ வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் நான்கு பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்த இராணுவ வீரரின் சடலம் கிளிச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மாங்குளம் பொலிசார்முன்னெடுத்து வருகின்றனர்.

(02)

# ஆளுநர் பதவியிலிருந்து விலகும் விலீ கமகே ஜனாதிபதி ஆலோசகர் பதவியை நிராகரிப்பு



தென் மாகாண ஆளுநரான கலாநிதி விலீ கமகேவுக்கு ஜனாதிபதியின் ஆலோசகர் பதவியொன்றை வழங்குவதற்கு முன்மொழியப்பட்டதாகவும், ஆனால் அந்த பதவியை ஏற்க ஆளுநர் மறுத்துவிட்டதாகவும் அலுவலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எதிர்காலத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்சவுக்கு ஆதரவளித்து அவரது அலுவலகத்தில்பணியாற்ற அவர் தயாராகவுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கலாநிதி விலீ கமகேயின் ஆளுநர் பதவியிலிருந்து விலகுவதற்கான கடிதம் மே மாதம் 2ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் ஜனாதிபதி செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, வடமேல் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன எதிர்வரும் 2ஆம் திகதி தென் மாகாண ஆளுநராக பதவியேற்க உள்ளார்.

(ரெசி-117)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணை இந்த அரசாங்கம் ஒருபோதும் நடத்தாது!

## அனுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளை தற்போதைய அரசாங்கம் ஒருபோதும் முன்னெடுக்காது, என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸ ாநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த 2015ஆம் ஆண்டு தொடக்கம் நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிரான மனநிலையை ராஜபக்சர்களே தேற்றுவித்தனர்.

இவ்வாறு முஸ்லிம்களுக்கு எதிராக உருவான மனநிலையின் இறுதி வெளிப்பாடுதான் இந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதல். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணைகளை தற்போதைய அரசாங்கம் ஒருபோதும் முன்னெடுக்காது. ஆனால், தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் நாம் விரிவான விசாரணை மேற்கொள்வோம், என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

(04)

# விசேட வர்த்தமானியினூடாக ஜனாதிபதி செயலகத்திற்கு புதிதாக இருபத்தொரு அதிகாரிகள் நியமனம் பெற்றனர்

ஜனாதிபதி செயலகத்திற்கு இருபத்தொரு அதிகாரிகளை நியமித்து ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க அதி விசேட வர்த்தமானியை வெளியிட்டுள்ளார். ஜனாதி பதியின் மேலதிக செயலாளர், ஜனாதிபதியின் உதவி செயலாளர் உட்பட பல பதவிகளுக்கு இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதன் கீழ், ஜனாதிபதியின் மேலதிக செயலாளர்கள் இருவர், ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவி செயலாளர்கள் இருவர் மற்றும் ஜனாதிபதியின் உதவி செயலாளர்கள் இருவர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், ஜனாதிபதியின் முழுநேர மேலதிக பதில் செயலாளர், ஜனாதிபதியின் முழுநேர சிரேஷ்ட பதில் செயலாளர்கள் ஐவர், ஜனாதிபதி சிரேஷ்ட மேலதிக செயலாளர்கள் இரண்டு பேர், துணை செயலாளர்கள் மூன்று பேர், உதவி செயலாளர், ஒரு தலைமை கணக்காய்வாளர், ஒரு கணக்காய்வாளர் மற்றும் ஒரு இயந்திர பொறியாளர் ஆகியோரும் நியமிக்கப்பட் டுள்ளனர்.

(ரெசி-118)

# க.பொ.த சாதாரண தரப் பரீட்சை திணைக்களத்தின் அறிவிப்பு

எதிர்வரும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையை இலக்காகக் கொண்டு இடம்பெறும் மேலதிக வகுப்புகள் மற்றும் கருத்தரங்குகள் எதிர்வரும் 30 ஆம் திகதி நள்ளிரவுடன் இடை நிறுத்தப்படவேண்டும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, அன்றைய தினம் நள்ளிரவு முதல், பரீட்சையை இலக்காகக் கொண்ட மேலதிக வகுப்புகள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் உள்ளிட்டவை இடைநிறுத்தப்படவேண்டும், என அதன் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். இந்த விதிகளை மீறுவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக் கைப்பட்டுள்ளது.

எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை சாதாரண தரப் பரீட்சை நடைபெறவுள்ளது.

இதேவேளை, அண்மையில் நடைபெற்ற உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் மே மாத இறுதியில் வெளியிடப்படும் எனவும் பரீட்சை திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

(04)



# கல்விச் சாதனையாளர்கள் காரைதீவில் கௌரவிப்பு

(காரைதீவுச் செய்தியாளர்)

காரைதீவில் நடப்பாண்டின் கல்விச் சாதனையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

காரைதீவு விளையாட்டு கழகத்தின் 41வது வருட சித்திரை புத்தாண்டு கொண்டாட்டத்தின் போது குறித்த சாதனையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

கழகத் தலைவர் வி.விஜயசாந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கபொத சாதாரண தரத்தில் 9ஏ பெற்ற மற்றும் கபொத உயர்தர பரீட்சையில் 3ஏ சித்தி பெற்ற மாணவர்கள் 29 பேர் பெற்றோர்கள் முன்னிலையில் சான்றோரால் பாராட்டப்பட்டார்கள்.

பிரதம அதிதியான விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன்

ஏனைய அதிதிகளான அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன், முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் மற்றும்

கழக போசகர்களான வே.இராஜேந்திரன், வே.த.சகாதேவராஜா உள்ளிட்ட அதிதிகளும் கலந்துகொண்டு கௌரவித்தனர்.

# சர்வதேச ஒலிம்பியாட் கணிதப் போட்டியில் கல்முனை ஸாஹிரா கல்லூரியின் மாணவர்

(அஸ்ஹர் இப்றாஹிம்)



தேசிய மட்ட கணித ஒலிம்பியாட் பரீட்சையில் சித்தியடைந்து சர்வதேச மட்டம்செல்லும்வாய்ப்பை பெறுகிறார் கல்முனை ஸாஹிரா தேசியக்கல்லூ ரி மாணவன் ஏ.எச்.ஆர்.முஹம்மட் றஹ்மி

கல்முனை ஸாஹிரா தேசியக்கல்லூரி மாணவருக்கு தேசிய மட்ட கணித ஒலிம்பியாட் பரீட்சையில் சித்தியடைந்து சர்வதேச மட்டம் செல்லும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி மாணவரான அபுல் ஹக்கம் றமீஸ் முஹம்மட் றஹ்மி, கடந்த சனிக்கிழமை (20) கொழும்பு ஆனந்தா கல்லூரியில் நடைபெற்ற தேசிய கணித ஒலிம்பியாட் போட்டியில் பங்கு பற்றி அதில் சித்தியடைந்து சர்வதேச ஒலிம்பியாட் கணித போட்டியில் கலந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றுள்ளார்.



# தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தால் நூலகங்களுக்கு புத்தகங்கள் வழங்கல்

பல்கலைக்கழகத்தை சமூகத்துடன் இணைத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தலைமையில் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் பல்கலைக்கழகத்தில் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. இதன் ஓர் அங்கமாக பொது நூலகங்களை வலுவூட்டல் திட்டமானது பல்கலைக்கழக நூலகர் எம்.எம். றிபாயுத்தீனின் ஆலோசனையின் பேரில் நடைமுறைப்படுத்தப்படுகின்து.

இதற்காக SERLIN தென்கிழக்குப்பிராந்திய நூலக தகவல் வலையமைப்பானது பெரும் பங்காற்றி வருகின்றது.

இந்த வகையில் உலகப் புத்தக தினத்தை கொண்டாடும் முகமாக தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலகமானது தெரிவு செய்யப்பட்ட 8 நூலகங்களுக்கு சுமார் 733 புத்தகங்களை வழங்கி சிறப்பித்தது.

இதற்கான நூல்களை அவுஸ்திரேலியாவிலுள்ள YM TRUST நிறுவனத்தினர் வழங்கியிருந்தனர்.

இதுவரை இந்நிறுவனமானது சுமார் 6341 புத்தகங்களை 4 கட்டங்களாக வழங்கியுள்ளது. அனைத்து நூலகளும் இப்பிரதேசத்திலுள்ள 25 பொது நூலகங்களுக்கும் 55 பாடசாலை நூலகங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

இந்நூல்களின் மொத்தப்பெறுமானம் சுமார் 8 மில்லியன் ரூபாய்கள் ஆகுமென சிரேஷ்ட உதவி நூலகரும் வெளிக்களப் பயிற்சி இணைப்பாளருமான எம். சி.எம்.அஸ்வர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் - நிந்தவூர் பொது நூலகம், சாய்ந்தமருது பொது நூலகம், வாசிப்பு நிலையம் வீரமுனை, பொது நூலகம்ஒலுவில், அல்ஹம்றா வித்தியாலயம் ஒலுவில், சம்மாந்துறை அமிர் அலி வித்தியாலயம், மருதமுனை அல்மனார் தேசிய பாடசாலை, அட்டாளைச்சேனை பொதுநூலகம் ஆகிய நூலகங்கள் நூல்களைப் பெற்றுக்கொண்டன.

இந்த நிகழ்வில் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில், பிரயோக விஞ்ஞான பீடப் பீடாதிபதி கலாநிதி எச். எம்.ஹாறுன் நூலகர் எம்.எம். றிபாயுத்தீன், பதிவாளர், நிதியாளர் உட்பட பல முக்கிய பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# மந்தபோசனை விழிப்புணர்வு தம்பலகாமத்தில் நிகழ்வு



(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பிரதேச செயலக பகுதிக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட அரச அதிகாரிகளுக்கான மந்தபோசனை தொடர்பான விழிப்புணர்வு தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் இன்று (26) இடம் பெற்றது.

குறித்த நிகழ்வானது Scalng up Nutrition peoples Forum இன் நிதிப் பங்களிப்பில், சக்தி மகளிர் அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

மந்தபோசனை, உணவு பழக்க வழக்கங்கள், கர்ப்பிணித் தாய்மார்களின் ஆரோக்கியமான நிலை உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து இதன் போது விழிப்புணர்வூட்டப்பட்டது.

குறித்த நிகழ்வுக்கு வளவாளராக திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் தாய் சேய் நல மருத்துவ அதிகாரி வைத்தியர் ஏ.எச்.சமீம் கலந்து கொண்டார்.

இதில் தம்பலகாமம் பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப், தம்பலகாமம் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் மலர்விழி உட்பட பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், கல்வி அதிகாரிகள், வெளிக்கள உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# 24 வருட கல்விச் சேவையிலிருந்து காரைதீவு ஆசிரியை ஓய்வு



(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவைச்சேர்ந்த திருமதி ஜெயகோபன் நந்தினி தனது 60 வது வயதில் இன்று ஓய்வு பெற்றார்.

இதனையிட்டு, அவர் இறுதியாக கற்பித்த நிந்தவூர் இமாம் கஸ்ஸாலி மஹா வித்தியாலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிரியாவிடை நிகழ்வு நடாத்தப்பட்டது.

2000 ஆம் ஆண்டு தொடங்கிய அவரது ஆசிரியர் சேவை 2024 உடன் நிறைவு பெற்றது.

2000 – 2008 வரை காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரியிலும், 2009– 2019 வரை அட்டப்பள்ளம் விநாயகர் வித்தியாலயத்திலும், இறுதியாக 2020– 2024 வரை இமாம் கஸ்ஸாலி மஹா வித்தியாலயத்திலும் இவர் சேவையாற்றியிருந்தார்.



# மீண்டுமொரு மக்கள் போராட்டம் ஏற்படாத வகையில் எமது பொருளாதாரத்தை கட்டமைத்துவருகிறோம்!

## ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவிப்பு



மக்கள் போராட்டம் மீண்டும் ஏற்படாத வகையில் பொருளாதாரத்தை கட்டமைப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு, ஐரிசி ரத்னதீப அதி சொகுசு ஹோட்டல் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, “ஐரிசி நிறுவனத்தை இலங்கைக்கு வரவேற்கிறேன். இது ஆசியாவின் முதலாவது ஐந்து நட்சத்திர ஹோட்டலான காலி முகத்திடல் ஹோட்டலுக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ளது. இதனால் கொழும்பு நகரம் சுற்றுலா கேந்திரமாக மாறும் என்பதில் சந்தேகமில்லை.

இந்தியாவிற்குள் நிர்மாணிக்கப்பட்ட 10,000 அறைகளை கொண்ட ஹோட்டல் கட்டிடத்திற்கு பின்னர் அடுத்தபடியாக அவர்கள் செல்லக்கூடிய சிறந்த இடமாக ஐரிசி நிறுவனம், இலங்கையை தெரிவு செய்துள்ளமை சிறப்பம்சமாகும்.

அவர்களால் மேம்படுத்தக்கூடிய பல இடங்கள் இலங்கையில் அமைந்துள்ளன.

அடுத்த தசாப்தத்தில் இலங்கை ஜனாதிபதி மாளிகை மாதிவெலவிற்கு கொண்டு செல்லப்படும். இதனால், கொழும்பு குடியரசு சதுக்கம், கடற்படை தலைமையகம், பழைய இறங்குதுறை, சுங்கத் தலைமையகம், தபால் நிலையம் என அனைத்தையும் கொழும்பு சுற்றுலா நகரத்தின் அங்கமாக மேம்படுத்த முடியும்.

இன்றைக்கு இரண்டு வருடங்களுக்கு முன்பிருந்த நிலைமையை நீங்கள் மறந்திருக்கப்போவதில்லை. ஜனாதிபதியின் அலுவலகம் சுற்றி வளைக்கப்பட்டு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. பொருளாதார வீழ்ச்சியின் காரணமாகவே மக்கள் அதில் பங்கெடுத்தனர்.

இருப்பினும் அந்த பொருளாதார சரிவிலிருந்து இரண்டு வருடங்களில் நாட்டை மீட்டெடுக்க எம்மால் முடிந்தது.

தற்போது கொழும்பு சுற்றுலா நகரமாக மாறியுள்ளது.

நட்சத்திர ஹோட்டல்கள் பல காணப்படுவதால் சுற்றுலா வியாபாரத்தின் மீது நம்பிக்கை வைக்க முடியும். சரிவடைந்த பொருளாதாரத்தை மீட்பதற்கான அஸ்திரமாகவும் அது அமைந்திருக்கும். சுற்றுலா வியாபாரத்தினால் இலங்கையை துரிதமாக மீட்கலாம்.

அதற்கான வசதிகளை வழங்க நாம் தயார். மீண்டும் அவ்வாறானதொரு மக்கள் போரட்டம் மீண்டும் ஏற்படாதவாறான பொருளாதாரத்தைக் கட்டமைக்க வேண்டும்.

அதற்குத் தேவையான திட்டங்களை நாம் செயற்படுத்துவோம். இந்த திட்டங்களால் பொருளாதாரத்தையும் நிலைப்படுத்த முடியும்.

அதனால்மக்களின்வாழ்க்கைத்தரமும்உயர்வடையும்” என தெரிவித்தார்.

# குரங்குகளின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த புதிய கருப்பைக் கருவி இலங்கையில் உருவாக்கம்

குரங்குகளின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த வளைய வடிவிலான புதிய கருப்பைக் கருவியை பேராதனை பல்கலைக்கழகத்தில் உள்ள கால்நடை மருத்துவ பீடம் அறிமுகப்படுத்தியுள்ளது. இக் கருவியானது பெண் குரங்களின் கருப்பையில் கரு உருவாவதை தடுக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேராதனை பல்கலைக்கழகத்தில் உள்ள கால்நடை மருத்துவபீடத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்த கருவி, ஒருமுறை குட்டி ஈன்ற ஒன்றரை வயது பெண் குரங்கிற்கு சோதனைக்காகபயன்படுத்தப்பட்டது.

இச்சோதனையின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட கதிரியக்க பரிசோதனையில், கருப்பையில் பொருத்தப்பட்ட கருவிவெற்றிகரமாக செயல்பட்டுள்ளதைஅவதானித்ததாக பேராதனை பல்கலைக்கழகத்தின் கால்நடை மருத்துவ பீடத்தைச் சேர்ந்த சிரேஷ்ட பேராசிரியர் அசோக தங்கொல்ல தெரிவித்துள்ளார்.

பெண்களுக்கு கர்ப்பம் தரிப்பதை தடுக்கும் நடைமுறையிலுள்ள சாதாரண அளவிலான கருவியை பயன்படுத்திய போது அது தோல்வி அடைந்தது என்றும் இதனால் சிறிய அளவிலான வளையத்தை உருவாக்க முடிவுசெய்தோம், என்றும் பேராசிரியர் அசோக தங்கொல்ல குறிப்பிட்டுள்ளார். பேராதனை போதனா வைத்தியசாலையின் மகப்பேறு மற்றும் நரம்பியல் திணைக்களத்தின் வைத்தியர்களும் பேராதனையிலுள்ள பல் வைத்திய பீடத்தினரும் இந்த முயற்சிக்கு தமது ஒத்துழைப்பை வழங்கியுள்ளனர். இந்த கருவியை பொறுத்துவதற்கு விலங்கை அமைதிப்படுத்த அரை மணிநேரம்எடுக்கும்என்றும்அதைத் தொடர்ந்து அறுவை சிகிச்சைக்கு மற்றொரு அரை மணிநேரம்எடுக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முறை நாட்டில் குரங்குகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளைக்கொண்டுள்ளதுஎனவும் பேராசிரியர் அசோக தங்கொல்ல தெரிவித்துள்ளார்.

இந்த வளைய வடிவிலான புதிய கருப்பை கருவியை உற்பத்தி செய்ய 2000 ரூபாய் செலவாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.






# நாடகமும் அரங்கியலுக்குமான சான்றிதழ் கற்கைநெறி யாழில்




நாடகமும்அரங்கியலுக்குமான சான்றிதழ்கற்கைநெறி எதிர்வரும் மே மாதம் முதல் வாரத்தில் திகதி ஆரம்பமாகிறது. பயிற்சி நெறியின் இயக்குனராக கலாநிதி தே.தேவானந்த் அவர்கள் பணியாற்றுவார்.

அரச தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் மாணவர்களின் வேண்டுகோளுக்கமைவாகமாலை 6 மணி தொடக்கம் 8.30 மணிவரை பயிற்சிஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

மூன்று மாத காலம், 60 மணித்தியாலங்கள், சனி – ஞாயிறு 6 – 8.30 வரை பயிற்சி நடைபெறும். பயிற்சி யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்துள்ள “முற்றம்“ அலுவலகத்தில் நடைபெறும். பயிற்சியில் பங்கு கொள்பவர்களுக்கான வயதெல்லை 20 – 45 ஆகும்.

பாலர்பாடசாலை ஆசிரியர்கள், ஆரம்பப்பாடசாலை ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், நாடகமும் அரங்கியலும் மாணவர்கள்மற்றும்ஆர்வமுள்ள அனைவரும் பயிற்சியில் பங்கு கொள்ளலாம்.

பயற்சி செயல்முறை சார்ந்ததாகவே வடிவமைக்கப்பட்டுள்ளது. பயிற்சியில் பங்கு கொள்பவர்கள் நல்லூர் நாடகத் திருவிழாவில் நாடகங்களில் நடிக்கும் வாய்ப்பையும் பெறுவார்கள்.

பயிற்சி இலவசமாக நடைபெறும். பதிவு செய்வதற்காக ரூபா 2000 கட்டணம் செலுத்த வேண்டும். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். பதிவு செய்வதற்கான வட்சப் இலக்கம்: 0094773112692

சுயமாக தயாரிக்கப்பட்ட சுயவிபரக்கோவையை அனுப்பி பதிவு செய்து கொள்ளலாம்.

பயிற்சியில் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலேயே மாணவர்கள் இணைத்துக கொள்ளப்படுவார்கள். முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் பயிற்சியில் மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவர்.

**பயிற்சி உள்ளடக்கம் –**

நாடகக்கோட்பாடுகள், நடிப்பு பயிற்சி, நாடகம் எழுதுதல், நாடக நெறியாள்கை, நாடகப் படைப்பாக்கம், சிறுவர் நாடகத் தயாரிப்பு ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

செயல்திறன் அரங்க இயக்கம் மற்றும் முற்றம் நிறுவனம் ஆகியன இணைந்து இந்தப் பயிற்சியை ஒழுங்கு செய்து நடத்தவுள்ளனர். (01)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.04.2024இல் வெளியிடப்பெற்றது.